EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARED OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை, 2020 ஒக்டோபர்

ஆசிரியர் :
மு.வே.அன்பழகன்

# இறுதி மாதிரிப் பரீட்சை

நேரம் 1 மணித்தியாலம் 15 நிமிடம்

## வினாத்தாள் II

❖ உமது சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

சுட்டெண்:……………………………........…………

❖ இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு உறுப்பெழுத்தில் விடையளிக்கவும்.

❖ தரப்பட்ட அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

❖ செய்கை வேலைகளுக்காக இரண்டு தாள்கள் வழங்கப்படும்

இதன் கீழே எதனையும் எழுத வேண்டாம்

விடைத்தாள் பரீட்சகருக்கு மட்டும் உரியது

| பக்க இலக்கம் | பெற்றபுள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |



இறுதிப்புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

குறியீட்டு இலக்கம்

| | |
|---|---|
| விடைத்தாள் பரீட்சகர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| மேற்பார்வையாளர் | |

**01. பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியில் இருந்து விடையைத் தெரிந்து எழுதுக**

> சூரியனின் பொன்மயமான ஒளிக்கதிர்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அதனுடைய வெளிச்சம் மெல்ல மெல்ல அடிவானத்திலிருந்து எழுந்தது. அதுதான் எல்லா மிருகங்களையும் நித்திரை விட்டெழும்பச் செய்யும் அறிவித்தல். அன்று மிருகங்களும் அதன்படி நித்திரை விட்டெழுந்து காலைச் சூரியனை வரவேற்றன. ஒரு புதிய நாளும் பிறந்தது. அந்தப் புதிய நாளுடன் மிருகங்களும் அன்றைய வாழ்க்கையை ஆரம்பித்தன.

*1) சூரிய வெளிச்சம் எங்கிருந்து எழுந்தது?* ....................................................................

*2) காலைச் சூரியனை வரவேற்றன எவை?* ....................................................................

*3) பெயரடை மொழியை எழுதுக?* ....................................................................

*4) அஃறிணைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக?* ....................................................................

*5) "உறக்கம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?* ....................................................................

*6) "இருள்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?* ....................................................................

**02. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக**

*1) அறிவியலாளர் , அறிவியளாளர் , அரிவியழாளர் , அறிவியலாலர்*

*2) புல்லாங்குளல் , புல்லாங்குழல் , புள்ளாங்குழல் , புல்லாங்குலழ்*

**03. பழமொழியைப் பூர்த்தி செய்க.**

*ஆறின கஞ்சி* ....................................................................................................

**04. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக**

*( கதிரைகள், அது, விழுந்தன, மாணவர்கள், சிறுவன், பாடினாய்)*

*1) உயர்திணை முன்னிலை வினைச் சொல்* - ....................................................................

*2) அஃறிணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல்* - ....................................................................

*3) அஃறிணை, படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல்* - ....................................................................

**05. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ' ✓ ' எனவும் பிழையாயின் ' ✗ ' எனவும் அடையாளமிடுக**

*1) அந்தப்பட்டத்தில் நிறங்கள் பல உள்ளது. (......................)*

*2) ஒவ்வொரு பாடலும் இனிமையானது. (......................)*

**06. தனிச் சொல்லை எழுதுக**

*1) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன்* ....................................................................

*2) ஒரு நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை* ....................................................................

**07. பின்வரும் திருக்குறளைப் பூர்த்தி செய்க**

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்* ....................................................................

....................................................................................................





TAMIL WE REPORT TO YOU.

**08. குறியீடு இடுக**

நீ இங்கே வா என்று ஆசிரியர் அழைத்தார்

**09. சரியான விடையை எழுதுக**

1) “அ.ப” என்பதன் விரிவை எழுதுக? ..............................................................................................

2) “அவன் கோடலி வேண்டினான்” இதன் எழுத்து வடிவம்? ........................................................................

3) இணைமொழியைப் பூர்த்தி செய்க. கையும் ......................................................

4) “நீர் மேல் எழுத்துப் போல” இதன் கருத்து யாது? ..........................................................................


5) “ஆடு” இதன் கூட்டத்தைக் குறிக்கும் சொல்? ..............................................................................


6) “கற்றாளை” இதன் உள்ளீட்டு மரபுப் பெயர்? ..............................................................................


7) கிளி பேசும் அதுபோல் எருமை .....................................................................................................

8) தமிழில் உயிர் எழுத்துக்கள் எத்தனை?,...........................................................................................

**10. பின்வருவனவற்றின் ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

1)  ...............................

2)  ...............................

3)  ...............................

**11. தமிழ்க் கருத்து எழுதுக**

1) I am very big - ..........................................................................................

2) Let's play with water - ..........................................................................................

**12. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதுக**

How many ........................................ (cat , cats) are there?

**13. சிங்களத்தின் தமிழ்க் கருத்தை எழுதுக**

1) தம்பி இருக்கிறார் - ..........................................................................................

2) காகம் கறுப்பு நிறம் - ..........................................................................................

**14. தமிழ்க்கருத்து எழுதுக**

மட்ட வதுர ஒன - ..........................................................................................

**15. இலங்கை பல்லின மக்களைக் கொண்ட நாடு ஆகும். இங்கே உள்ள மக்கள் பல்வேறு பண்டிகைகளைக் கொண்டாடுகின்றார்கள். “பண்டிகைகளைக் கொண்டாடுவதன் பயன்கள்” என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமானதாகவும் ஆறு சொற்களுக்குக் குறையாதும் இருத்தல் வேண்டும்.)**

1. ..........................................................................................

..........................................................................................

2. ..........................................................................................


..........................................................................................

3. ..........................................................................................

..........................................................................................

**16. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைக் கணித்து எழுதுக.**

*1)*




i) வட்டத்தில் உள்ள எண்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.......................................................................................


ii) அவ்வெண்ணை எழுத்தில் எழுதுக.

.......................................................................................

*2)* உரோமன் எண்ணில் எழுதுக.

14 - ..........................................  19 - ..........................................

*3)*




i) எண் சட்டம் காட்டும் எண் யாது? ..........................................................

ii) 3 5 1 2 என்னும் எண்ணைக் காட்ட எண் சட்டத்தின் கம்பிகளில் இடுவதற்கு இன்னும் எத்தனை மணிகள் வேண்டும்?

.......................................................................................

*4)* 835 சவர்க்காரக்கட்டிகளை 4 பெட்டிகளில் சமனாக அடுக்கி வைக்க வேண்டும்.


i) அவ்வாறு அடுக்கிய போது ஒரு பெட்டியில் அடுக்கப்பட்ட சவர்க்காரக்கட்டிகள் எத்தனை?

.......................................................................................

ii) அடுக்கிய பின் மீதியாகவுள்ள சவர்க்காரக்கட்டிகள் எத்தனை?

.......................................................................................

*5)*



இவ்வுருவில் உள்ள

i) செங்கோணங்கள் எத்தனை? ..........................................................

ii) செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை? ..........................................

*6)* 130 கொய்யாப் பழங்களில் $\frac{3}{10}$ ஐ ராஜனும், மீதியை கீதாவும் பெற்றனர். கீதா பெற்ற கொய்யாப்பழங்கள் எத்தனை?

.......................................................................................

*7)* ஒன்றின் விலை ரூபாய் 35.00 வீதம் 6 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு ரூபா 500 நாணயத் தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

..........................................

*8)* ஒன்று 250 கிராம் நிறையுடைய 7 பால்மா பைக்கற்றுக்களும் 750 கிராம் நிறையுடைய 3 பால்மாப் பைக்கற்றுக்களும் இருந்தன. இந்தப் பத்துப் பால்மாப் பைக்கற்றுக்களினதும் மொத்த நிறை எத்தனை கிலோகிராம் ஆகும்?

.......................................................................................

*9)* பாடசாலை மாணவர் மன்ற நிகழ்வொன்று 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள் வரை நடைபெற்று பிற்பகல் 2.30 இற்கு முடிவடைந்தது.

i) மாணவர் மன்ற நிகழ்வு முடிவடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

.......................................................................................

ii) மாணவர் மன்ற நிகழ்வு ஆரம்பித்த நேரம் யாது? ..........................................

*10)* 30cm நீளமான கம்பியொன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்ட போது பெரியது சிறியதிலும் 6cm நீளம் கூடியதாக இருந்தது. எனின் பெரிய துண்டின் நீளம் யாது?

....................................................cm


*11)* செங்கற் குவியலொன்றில் 750 செங்கற்களும் இரண்டாவது குவியலில் முதற்குவியலில் உள்ளது போன்று மூன்று மடங்கு செங்கற்களும் காணப்பட்டன. எனின் இரண்டு குவியல்களிலும் உள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.......................................................................................

*12)* 90$l$ கொள்ளக்கூடிய பாத்திரம் ஒன்றில் $\frac{2}{3}$ பங்கு நீர் உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 10$l$ கொள்கலனால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?

.......................................................................................

13)




மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் மலர் வகைகள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.

(i) ரோசா மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை மல்லிகை மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுலானது?

: ........................................

(ii) குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

: ........................................

14) 3kg 750g தேயிலையில் இருந்து எத்தனை 125g தேயிலைப் பைக்கற்றுக்களைச் செய்ய முடியும்?

..............................................................................

15) மரத்திற்கு மேற்குத்திசையில் 100 m தூரத்தில் கமலன் வீடு உள்ளது. மரத்திற்கு தெற்குத்திசையில் 100 m தூரத்தில் விமலன் வீடு உள்ளது. விமலன் வீட்டுக்கு எத்திசையில் கமலன் வீடு உள்ளது?

..............................................................................

**17) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) "எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும். எனது வீட்டாரும் உணரட்டும், எனது பாடசாலையினரும் உணரட்டும்" இவை மனதை ஒருநிலைப்படுத்தும் எந்தப் படிமுறையில் அடங்கும்,

(1) மனவுறுதி (2) பிரார்த்தனை (3) மலர்வு

2) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் பாதிப்புக்களில் அடங்காதது,

(1) உடல் தளர்ச்சி (2) தோல் உலர்தல் (3) உடலில் குளிர்ச்சி

3) இலங்கையின் தேசிய விளையாட்டும், தேசிய மரமும் முறையே,

(1) நாகமரம், கிரிக்கெட் (2) வொலிபோல், நாகமரம் (3) வொலிபோல்,நீலோற்பலம்

4) நாருரு வேர், ஆணி வேர் கொண்ட தாவரங்கள் முறையே,

(1) நெல், குரக்கன் (2) தென்னை, பனை (3) பனை, பப்பாசி

5) எல்லாக் காலங்களிலும் பூக்கள் பூக்கும் தாவரம்

(1) கொன்றை (2) முள்முருங்கை (3) தென்னை

6) எந்தப்பிராணியின் உடலில் வாழும் தெள்ளின் மூலம் பிளேக் என்னும் கொள்ளை நோய் பரப்பப்படுகிறது?

(1) எலி (2) கீரி (3) பூனை

7) கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் எந்த மாகாணத்திற்குரியன?

(1) மத்திய மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம் (3) மேல் மாகாணம்

8) வலைப்பந்தாட்டம், கூடைப்பந்து ஓரணியில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை முறையே,

1) 6, 5 (2) 7 , 5 (3) 5 , 7

9) நீரில் மிதக்கும் பொருட்கள் மாத்திரம் அடங்கிய விடை,

(1) இறப்பர்ப்பந்து, செங்கல் துண்டு (2) பென்சில், செப்பு நாணயம் (3) பென்சில், இறப்பர்ப்பந்து

10) தேசியக் கொடியில் காணப்படும் நிறங்களைச் சரியாகக் காட்டும் விடை,

(1) சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் (2) சிவப்பு, செம்மஞ்சள், நீலம், கறுப்பு

(3) செம்மஞ்சள், பச்சை, மஞ்சள், சிவப்பு

11) வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணிகள்,

(1) நாய் , எறும்பு (2) பல்லி, கோழி (3) எலி, எறும்பு

12) உப்பு நீரில் முட்டையை இட்டால் யாது நிகழும்?

(1) முட்டை உடையும் (2) முட்டை மிதக்கும் (3) முட்டை அமிழும்

13) தோசம் நீக்கிக் கொள்ள பிரித் ஓதிய நீர் தெளிப்பவர்கள்,

(1) இந்துக்கள் (2) இஸ்லாமியர் (3) பௌத்தர்கள்

14) பயிர்ச் செய்கைக்குப் பாதகமான பிராணிகள்,

(1) மண்புழு, ஓணான் (2) வண்டு, நத்தை (3) தேனீ, ஆந்தை

15) தண்டுத்துண்டங்கள் மூலம் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம்,

(1) இராசவள்ளி, பீர்க்கு (2) மரவள்ளி, வத்தாளை (3) பயறு, முருங்கை

16) சக்தி தரும் உணவுக் கூட்டத்தில் அடங்காதது,

(1) பாண் (2) பருப்பு (3) பலாக்காய்

17) முலையூட்டி வகைப் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி,

(1) மரங்கொத்தி, மயில், மாடு (2) மாடு, நரி, புலி (3) ஆமை, புலி, கரடி

18) பின்வருவனவற்றில் பனிக்கட்டியொன்றை நீரில் இட்டால் நிகழாதது எது?

(1) பனிக்கட்டி நீரில் கரைதல் (2) பனிக்கட்டி நீரில் மிதத்தல் (3) நீரின் நிறம் மாற்றமடைதல்

19) சில்லுவண்டி, பாக்குவெட்டி ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே எவை?

(1) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், போத்தல் மூடி திறத்தல்

(2) ஆணி கழற்றுதல், போத்தல் மூடி திறத்தல்

(3) பாரமான பொருள்களைக் கொண்டு செல்லல், பொருள்களைத் துண்டுகளாக்குதல்

20) அரச இலச்சினையில் உள்ள குறியீடுகளில் அடங்காதது எது?

(1) தரம் சக்கரம் (2) நிறைகுடம் (3) தென்னம்பூ

21) செவிப்புலன் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?

(1) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை (2) வானொலி, ஒலிபெருக்கி


(3) செய்திப் பத்திரிகை, ஒலிபெருக்கி

22) வகுப்பறையில் குழுவேலைகளைச் செய்யும் போது மாணவரிடம் இருக்க வேண்டிய ஒரு நல்ல பண்பு,

(1) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல்


(2) ஏனையோரை விட முன்பதாகத் தமது வேலையை முடித்தல்

(3) தமது கருத்துக்களின் படி மாத்திரம் வேலை செய்தல்

23)  படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் எது?

(1) காம்புத் தையல் (2) சங்கிலித் தையல்

(3) கம்பளித்தையல்

24)  உருவில் உள்ள உடுக் கோலத்திற்கு வழங்கும் பெயர்

(1) பெருங்கரடி (2) தேள் (3) பெருநாய்

25) பின்வருவனவற்றுள், வித்து முளைக்கக் கூடிய சந்தர்ப்பம்

(1) சோதனைக் குழாயின் அடியில், ஈரமான பஞ்சின் மீது இடப்பட்டு சாதாரண அறையில் வைக்கப்பட்ட வித்து

(2) கொதிநீரில் அவித்தபின் சோதனைக் குழாயில் இட்டு சாதாரண அறையில் வைக்கப்பட்ட வித்து

(3) சோதனைக் குழாயில் இட்டு குளிர் சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட வித்து


26) நிறக் கடதாசிகளைக் கிழித்து ஒட்டி ஆக்கப்படும் சித்திரம்

(1) அச்சுப்பதித்தல் (2) பெத்திக் (3) கொலாஜ்

27) பின்வரும் எப்பொருளை வீட்டிலுள்ள எல்லோரும் பொதுவாகப் பயன்படுத்தலாம்?

(1) முகம் துடைக்கப் பயன்படும் துவாய் (2) தலைவராப் பயன்படும் சீப்பு

(3) பல் துலக்கப் பயன்படும் பற்பசை

28)  இக்குறியீடு உணர்த்தும் கருத்து

(1) மேலே பார்க்கவும் (2) இப்பக்கம் மேலே

(3) கீழிருந்து மேல்

29) வேரின் மூலம் தன் இனத்தைப் பெருக்கும் தாவரம்

(1) கத்தரி (2) தென்னை (3) கறிவேப்பிலை

30)  இக்குறியீடானது எதனைக் குறிக்கும்

(1) எச்சரிக்கை (2) மின்தாக்குதல் ஏற்படும்

(3) ஆச்சரியமான பொருள்